**ARTICLE 20 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00033**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 106–112
Received: 1 October 2026 • Accepted: 1 October 2026

# தென் தமிழகத்தில் அந்தோணியார் வழிபாடும் பண்பாட்டுப் பதிவுகளும்

**பாஸ்கர் வேளாங்கண்ணி ஜே[1,*], முனைவர்.கலைச்செல்வன் ச[2]**
[1]முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,அரசு கலைக்கல்லூரி,உடுமலைப்பேட்டை., India
[2]இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,அரசு கலைக்கல்லூரி,உடுமலைப்பேட்டை., India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** பாஸ்கர் வேளாங்கண்ணி ஜே — baskertamil1990@gmail.com

## Abstract
Religions are organizations created to refine and guide human society. In this way, Christianity is a new religion that emerged from Judaism. This religion, which emerged after the birth of Jesus Christ, has grown greatly on a global scale over time. Westerners visited Tamil Nadu for commercial purposes. Seeing the poverty and simple condition of the people living here, some of them started providing social welfare services along with spiritual and religious services to these people. They provided necessary medical and educational services to the people. Many people, attracted by their kind approach and sacrifice, embraced Christianity. They introduced the worship of saints among them. Thus, the worship of Christian saints became widespread in South Tamil Nadu.

## ஆய்வுச் சுருக்கம்
சமயங்கள் என்பவை மனித சமூகத்தைச் செம்மைப்படுத்தி நல்வழிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்புகள் ஆகும். அவ்வகையில் யூத மதத்திலிருந்து தோன்றிய ஒரு புதிய மார்க்கமே கிறிஸ்தவம் ஆகும். இயேசு கிறிஸ்துவின் பிறப்பிற்குப் பின் தோன்றிய இம்மதம் காலப்போக்கில் உலக அளவில் பெரும் வளர்ச்சி அடைந்தது. மேலைநாட்டினர் வாணிப நோக்கத்திற்காக தமிழகத்திற்கு வருகை புரிந்தனர். இங்கு வாழ்ந்த மக்களின் ஏழ்மையையும் எளிய நிலையையும் கண்ட அவர்களிள் சிலர் இம்மக்களுக்கு ஆன்மீக சமயப் பணிகளோடு சமூக நலப்பணிகளையும் ஆற்றத்தொடங்கினர். மக்களுக்கு தேவையான மருத்துவம் மற்றும் கல்விச் சேவைகளை செய்துள்ளனர். இவர்களின் அன்பான அணுகுமுறையாளும் தியாக உள்ளதாலும் ஈர்க்கப்பட்ட மக்கள் பலர் கிறித்துவ மதத்தினை தழுவினர். இவர்களிடையே புனிதர்களின் வழிபாட்டை புகுத்தினர். இவ்வாறு கிறித்துவ புனிதர்களின் வழிபாடு தென் தமிழகத்தில் பரவலாக வீறு கொண்டு எழுந்தன.

**Keywords / திறவுச் சொற்கள்:** அந்தோணியார் வழிபாடு> மக்களின் நம்பிக்கை> வாழ்வியல்> அசனம்> கொடியேற்றம்> கூட்டு வழிபாடு> வாசாப்பு> மண்டகப்படி> நேர்த்திக்கடன்> திருவிழா> குருக்கள்.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ஜே, பா. வே., & ச, மு. (2026). தென் தமிழகத்தில் அந்தோணியார் வழிபாடும் பண்பாட்டுப் பதிவுகளும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

கிறித்துவ மக்களிடையே அந்தோணியாரின் பக்தி முயற்சி மிகுந்தே காணப்படுகின்றது. மதுரை, திண்டுக்கல், ராமநாதபுரம், மற்றும் கடற்கரை பகுதிகளில் வாழும் மக்கள் அந்தோணியாரின் வழிபாட்டில் ஈடுபாடு உடையவர்களாக காணப்படுகின்றனர் அவ்வகையில் மதுரை மாவட்டத்திலிருந்து பிரிந்த திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள மக்கள் அந்தோணியார் மீது மிகுந்த பக்தி கொண்டவர்களாகவும் தேர்

திருவிழாவில் பண்பாடு தொடர்புடைய கலை நிகழ்வுகளை நிகழ்த்தியும் சமய நல்லிணக்கத்துடன் கொண்டாடி வருவதை காண முடிகின்றது. அவ்வகையில் அந்தோணியார் வழிபாட்டையும் மக்களின் வாழ்வியலையும், பண்பாட்டையும் விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## தமிழகத்தில் கிறிஸ்தவம்

தமிழகத்தில் கிறிஸ்தவ சமயம் கி.பி முதல் நூற்றாண்டிலேயே புனித தோமா என்பவரால் கடற்கரை பகுதிகளில் பரப்பப்பட்டு வந்தது. என்று குறிப்பிடுகின்றனர். “இந்திய மக்களுக்கு முதன்முதலில் நற்செய்தி அறிவித்தவர் பன்னிரு திருத்தூதர்களின் ஒருவரான புனித தோமையார் ஆவார். இவர் கிபி 52 ஆம் ஆண்டு தரை வழியாக இந்தியாவுக்கு வந்தார் என்றும் கேரளாவில் கொடுங்கலூர், பாலையூர், பாரூர், கோக்கமங்கலம், நிரணம், சாயல், கொல்லம் ஆகிய ஏழு இடங்களில் கோவில்களை கட்டி எழுப்பியுள்ளார். பின்னர் மயிலாப்பூருக்குச் சென்றார் அங்கே கிபி 75 ஆம் ஆண்டு கொலையுண்டார் என்றும் குறிப்பிடப்படுகிறது. அவருடைய கல்லறையின் மீதுதான் சாந்தோம் பேராலயம் எழுப்பப்பட்டுள்ளது.”**1** என தோமையார் கேரளா, தமிழக கடற்கரையோர பகுதி மக்களிடையே நற்செய்தியை பரப்பியும் அவர்கள் வழிபடுவதற்கான ஆலயங்களையும் எழுப்பினார் என மோனிகா அவர்கள் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## தென் தமிழகத்தில் சமய நல்லிணக்கம்

நமது நாடு சமயங்களை ஆதரித்து அரவணைக்கும் தாய்மை உள்ளம் கொண்ட நாடாக திகழ்கிறது இத்தகைய சூழலில் கிறித்துவ மதத்தினரையும் அவர்கள் வணங்கும் புனிதர்களின் வாழ்வையும் மக்கள் போற்றி மதித்து வருகின்றனர். தென்தமிழகத்தில் குறிப்பாக திண்டுக்கல் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் அந்தோணியார் வழிபாடு மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டு வருகிறது இங்குள்ள மக்கள் ஒவ்வொரு ஆண்டும் திருவிழாவை கோலாகலமாக கொண்டாடுகின்றனர். மேலும் இங்கு வாழும் மக்கள் புனித அந்தோணியார் மீது மிகுந்த நம்பிக்கையும் பக்தியும் கொண்டவர்களாக விளங்குகின்றனர்.

## புனித அந்தோணியார்

கிறிஸ்தவ சமயத்தில் அந்தோணியார் என்ற பெயரில் இரண்டு முக்கிய புனிதர்களை குறிப்பிடுகின்றனர். ஒன்று எகிப்து நாட்டில் வாழ்ந்த அந்தோணியார் இரண்டு பதுவா நாட்டில் வாழ்ந்த அந்தோணியார் இவ்விருவரையும் வேறுபடுத்தி காட்டுவதற்காக எகிப்து நாட்டில் வாழ்ந்தவரை பெரிய அந்தோணியார் என்றும் வனத்து அந்தோணியார் என்றும் பாலைவன அந்தோணியார் என்றும் குறிப்பிடுகின்றனர். பதுவா நாட்டில் வாழ்ந்தவரை புனித பதுவை அந்தோணியார் என்று மக்கள் அழைத்து வழிபட்டு வருகின்றனர்.

புனித பெரிய அந்தோணியார் கிபி 251 ஜனவரி 12ஆம் நாள் பிறந்தவர் எகிப்து நாட்டில் கோமா என்னும் பகுதியில் மிகப்பெரிய செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர். தனது இருபதாம் வயதில் பெற்றோரை இழந்தார். பின் உலக வாழ்வில் பல இன்னல்களையும் சோதனைகளையும் சந்தித்துள்ளார் அப்போது “நிறையுள்ளவனாக விரும்பினால் நீர் போய் உன் உடமைகளை விற்று ஏழைகளுக்கு கொடும் அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வந்தராய் இருப்பீர் பின்பு வந்து என்னை பின்பற்றும்"**2** என்னும்

மத்தேயுவின் வசனங்களை கேட்ட அந்தோணியார் தனது சொத்துக்களை எல்லாம் விற்று ஏழை எளியோருக்கு கொடுத்துவிட்டு தமது தமக்கையையும் துறவற மடத்தில் ஒப்படைத்து விட்டு தனது கிராமத்திற்கு அருகில் தனிமையில் துறவர பயிற்சியில் ஈடுபட்டார். பின்பு பாலைவனப் பகுதிக்குச் சென்று கடுமையாக தவம் புரிந்து வந்தார் என இவரின் வாழ்க்கை வரலாறு குறிப்பிடுகின்றது.

“ஒரு மனிதன் இடைவிடாமல் தனிமையில் ஜெபிக்க வேண்டும் என்பதை அறிந்த அந்தோணியார் தொடர்ந்து ஜெபத்தில் இருந்தார். இக்காலத்தில் அவர் நேர்மை, பரிவு, இடைவிடாத ஜெபம், சுதந்திரம், பொறுமை, மற்றவர்களிடம் அன்பான இருத்தல் சகிப்புத்தன்மை, ஒறுத்தல் முயற்சி, வெறும் தரையில் தூங்குதல் போன்ற புண்ணிய பண்புகளை கற்றுக் கொண்டார்”**3** ஒருவர் நிறை வாழ்வை அடைய பொருட்கள் மீது பற்றின்மை அன்பு பொறுமை சகிப்புத்தன்மை இவைகளே தேவை என்பதை உணர்ந்த அந்தோணியார் அவற்றை கடைப்பிடித்தார் பாலைவனத்தில் வாழ ஆரம்பித்தார். தன்னை நாகரீக வாழ்வில் இருந்து முற்றிலுமாக துண்டித்து வாழ முயற்சித்த தவ முனிவர் இவரே.

## அந்தோணியார் திருவிழா

கிறிஸ்தவர்கள் வாழும் கிராமங்களில் பங்கின் பாதுகாவலராக ஒரு புனிதரை வழிபட்டாலும் புனித அந்தோணியாருக்கு என்று தை மாதத்தில் பொங்கல் வைத்து திருவிழாவினை நடத்துகின்றனர். அதிலும் மாரம்பாடி, உலகம்பட்டி, கரிசல்பட்டி, கல்லாத்துப்பட்டி போன்ற ஊர்களில் வெகுவிமர்சையாக திருவிழாவினை நடத்துகின்றனர். ஏனெனில் இவ்ஊரில் பாதுகாவலராக விளங்குபவரே புனித பெரிய அந்தோணியார் ஆவார். இத்திருவிழாவில் சுற்றுப்புறத்தில் இருந்தும் பிற இடங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொள்கின்றனர்.

## திருவிழா தொடக்கம்

திருவிழாவின் தொடக்கமாக விழாவறைதல் முக்கிய பங்காற்றுகிறது திருவிழா நடைபெறும் நாளை மக்களுக்கு அறிவிக்கும் விதமாக பறைஇசை கலைஞர்கள் பறையடித்துக் கொண்டு ஊரை சுற்றி வருதலே விழா வறைதல் ஆகும். விழா வறைவோராக குயவர் இருந்ததை நற்றிணை 161 ஆம் பாடல் தெரிவிக்கின்றது.

திருவிழாக்கள் கோயிலோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை கோயில்களின் வளர்ச்சி மற்றும் விரிவாக்கம் கூட திருவிழாக்களை ஒட்டியே அமைகின்றன அக்காலத்தில் கோயில்கள் சமூகத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன சமூகத்தின் ஒரு அங்கமாக கோயில்கள் விளங்கின என்பதை, “மனிதன் அன்றாடம் உழைத்து உழைத்துச் சோர்வடைந்த போது விழாக்களின் வருகை மனிதனுக்கு உற்சாகம் அளிப்பதாக அமைந்தது எனவே அன்றிலிருந்து இன்று வரை திருவிழாக்கள் உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகின்றன இவ்விழாக்கள் பல்வேறு சமூகத்தினரை ஒன்றிணைப்பதாக அமைகின்றன."**4** இத்தகைய திருவிழாக்கள் மனிதனின் கவலைகளை போக்குவதாகவும் அவனை உற்சாகப்படுத்தும் ஓர் சக்தியாகவும் தான் அடைந்த நன்மைகளுக்கு நன்றியாகவும் மனித நேயத்தை மேம்படுத்துவதற்கானஒரு கருவியாகவும் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. “வருடம் முழுதும் உழைத்து

வாழும் மக்கள் விழாக்களின் போது ஓய்வு எடுத்துக் கொள்வதோடு தங்களை மகிழ்ச்சியோடு இயக்கவும் தகவமைத்துக் கொள்கின்றனர் அதாவது வருடத்தில் சில தினங்களில் உழைப்பை நிறுத்திவிட்டு உற்றார் உறவினரோடு ஒன்று கலந்து கூடி மகிழ்ச்சியோடு இருக்க விரும்புகின்றனர் அதன் அடிப்படையிலேயே கிராமங்களில் விழாக்கள் கொண்டாட ஆரம்பித்திருக்கலாம்."5 திருவிழாக்கள் மன மகிழ்ச்சிக்காகவும் உழைப்பின் பயனை இறைவனுக்கு செலுத்தவும் உழைக்கின்ற மக்கள் ஓய்வெடுக்கவும் உறவினர்களுடன் விருந்து உண்ணவும் ஏற்படுத்தப்பட்ட ஒரு கூட்டுநிகழ்வே திருவிழா என டாக்டர்.திருமதி. சற்குணவதி குறிப்பிடுவதில் இருந்து திருவிழாவின் நோக்கத்தினை அறிய முடிகின்றது.

## கொடியேற்றம்

கிராமங்களில் நடக்கும் முக்கிய நிகழ்வுக்கு ஊர் முக்கியஸ்தர்களின் ஊர் கூட்டம் நடைபெற்ற பின்னரே நிகழ்வு தொடங்குகிறது. திருவிழா நடைபெறுவதை தெரிவிக்கும் விதமாக கொடி ஏற்றப்படுகிறது அக் கொடியில் புனிதரின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். அதனை ஊரின் முக்கிய வீதிகளில் சுற்றி வந்து குருவானவரின் முன்னிலையில் கொடியேற்றுகின்றனர் .அதன்பின் கூட்டு வழிபாட்டு நிகழ்வு நடைபெறுகிறது. கொடியேற்றப்பட்ட நாளிலிருந்து பத்தாம் நாள் திருவிழா நடைபெறும் என்கின்றனர். சில ஊர்களில் முதல் நாள் கொடியேற்றி மறுநாள் திருவிழா கொண்டாடுகின்றனர். “திருவிழா என்னும் நிகழ்வால் மக்கள் குடியிருப்பை விட்டு புறத்தளத்திற்குச் சென்று அங்கு இறைவனை அதன் வெளித்தளத்திலிருந்து இறக்கி புறத்தளத்திற்கு கொண்டு வருவதே என்ற தளமாற்றம் நிகழ்வதை சுட்டுவதாக அமைகிறது."6 திருவிழா நடைபெறும் ஊரில் உள்ளூர் மக்கள் மட்டுமின்றி அருகில் உள்ள ஊர்களில் இருந்தும் பிற பகுதிகளில் இருந்து மக்கள் திரளாக கலந்து கொண்டு புறத்தளத்தில் இருக்கும் புனிதரிடம் மன்றாடுகின்றனர் தங்களின் வேண்டுதல்களை கோரிக்கையாக வைக்கின்றனர் என்பதை மேற்கண்ட கூற்றிலிருந்து அறிய முடிகிறது.

## மண்டகப்படி

கடவுளுக்கு செலுத்தும் கொடையே மண்டகப்படி என்கின்றனர். மண்டகப்படி செலுத்தும் சில சமூகத்தினர் உரிமை உடையதாகவும், சாதியத்துவத்தை நிலை நாட்டுவதாகவும் இருக்கின்றது. “திருவிழாக்களில் மண்டகப்படி என்பது இறைவனுக்கு கொடை வழங்கும் உரிமையாகும் உள்ளூர் கோயில்கள் முதல் பெரிய கோயில்கள் வரை திருவிழாக்களின் போது கோயிலோடு உரிமை பெற்ற சமூகத்தார் முறை வைத்து மண்டகப்படி செய்வர் சாதிவாரியாக மண்டகப்படி நடத்துவது சமூக அமைப்பில் நிலவி வரும் சாதி அமைப்பின் படிநிலையையும் அதிகாரத்துவத்தையும் வழிப்படுத்தும் செயலாகும்"7 என்று மண்டகப்படி செலுத்தும் முறையை தமிழர் மானுடவியலில் பக்தவாச்சலபாரதி குறிப்பிடுகின்றார். கிறிஸ்துவ சமயத்தை மேற்கொண்டு வரும் மக்கள் இதுபோன்ற மண்டகப்படி கொடையை செலுத்துகின்றனர். இது சாதி, சமய தொடர்புடையதாக குறிப்பிடப்படவில்லை திருவிழாவிற்கு வருபவர்கள் விருப்பம் இருப்பின் யார் வேண்டுமானாலும் மண்டகப்படி செலுத்தலாம் என்கின்றனர். இதில் செலுத்தியவர் பெயர், குடும்ப பெயர், ஊர் போன்றவை தேர் பவனிக்கு

முன்பு வாசிக்கப்படும் இங்கு சாதி சமயத்திற்கு இடம் இல்லை என்ற சமத்துவத்தை காண முடிகின்றது.

ஒரு சமயத்தில் இருந்து இன்னொரு சமயத்திற்கு மாறும்போது பழைய சமய நம்பிக்கைகளையும் சடங்கு முறைகளையும் கைவிட வேண்டிய சூழல் ஏற்படுகிறது ஆனால் மேலைநாட்டு குருக்கள் தென் தமிழகத்தில் சமயப் பணியாற்றும் போது அவர்களின் முந்தைய நம்பிக்கைகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் புனிதர்களின் வழிபாட்டை அறிமுகப்படுத்தி நிலைக்கச் செய்தனர் என்பதை “தெய்வ வழிபாட்டுடன் நாட்டார் தெய்வ வழிபாட்டையும் கொண்டிருந்த மக்கள் திறன் கிறித்தவரான பின் முந்தையவழிபாடுகளை கைவிடுவது இயல்பானதே அவர்களின் பழைய சமய வாழ்வுக்கு இணையான ஒன்றாக புனிதர் வழிபாடு இங்கு அன்றிக் அடிகளார் சுட்டப்படுகிறது"8 புனிதர்களின் வழிபாடு இவ்வாறு மக்களிடையே கொண்டு சென்றனர். இவர்களின் வாழ்வையும் வரலாற்றையும் அறிந்த மக்கள் வியப்பில்ஆழ்ந்து தங்களின் கோரிக்கைகளை வேண்டுதல்களாக இப்புனிதர்களிடம் வைக்கின்றனர். அதன் மூலம் பயனடைந்ததற்கு நன்றியாக நன்றிக் கடன் செலுத்துகின்றனர்.

## நேர்த்திக்கடன் செலுத்துதல்

அந்தோணியார் வழிபாட்டில் நேர்த்திக்கடன் முக்கிய வாழ்வில் கூறாக கருதப்படுகிறது. தாங்கள் வைத்த வேண்டுதல்கள் நிறைவேறியவுடன் அதற்கு பதிலாக குறிப்பிட்ட வழிபாட்டை மேற்கொள்வதாக மக்கள் உறுதி எடுக்கின்றனர் மொட்டை அடித்தல், பொங்கல் வைத்தல், கிடா வெட்டுதல், தேர் பவனிக்கு மின்னலங்கார உபயம் செய்தல், கொடி மரத்திற்கு மின் உபயம் செய்தல், கோவில் கோபுரத்திற்கு மின் உபயம் செய்தல் மற்றும் பொதுமக்களுக்கு அசனம் கொடுப்பதாக வேண்டிக் கொண்டதை நிறைவேற்றுகின்றனர். காணாமல் போன பொருட்கள் கிடைக்கவும், கால்நடைகளை பாதுகாக்கவும் பேய்பிடித்தவர்களை சுகமாக்கவும் இப்புனிதரிடம் வேண்டிக்கொண்டு பலன் பெறுகின்றனர்.

இதன் மூலம் தங்கள் வாழ்வில் வளம் பெறுவதாக நம்பிக்கை கொள்கின்றனர்.

## திருவிழாவும் சமூக ஒற்றுமையும்

திருவிழா என்பது தனிப்பட்ட வழிபாட்டை தாண்டி மக்களை ஒருங்கிணைக்கும் சமூக நிகழ்வாக அமைகிறது. “மாரம்படி புனித அந்தோணியார் திருவிழாவிற்கு சுற்றுப்புற கிராமங்களில் இருந்தும் வெளி மாவட்டம், வெளி மாநிலங்களில் இருந்தும் மக்கள் வருவது இதற்குச் சான்றாகும் ஜனவரி 16,17,18 ஆகிய மூன்று நாட்கள் திருவிழா நடைபெறுகிறது சாதி மத பேதமின்றி மக்கள் திரளாக கலந்து கொண்டு புனிதரின் அருள் ஆசிரை பெறுகின்றனர்.”**9** இத்திருவிழாவில் பாரம்பரிய கலை நிகழ்வுகளான கும்மி, கோலாட்டம், பறை இசை கலைஞர்களின் பறை ஆட்டம் மற்றும் அந்தோணியாரை வரவேற்கும் வாசாப்பு பாரம்பரியமாக தொடர்ந்து நடைபெறுகிறது இதன் பின்னரே வான வேடிக்கைகளும் நடைபெறுகிறது.

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

## முடிவுரை

திண்டுக்கல் மாவட்ட மக்களின் அந்தோணியார் வழிபாட்டை ஆராயும் போது அது வெறும் சமயச்சடங்காக மட்டுமே விளங்கவில்லை என்பது தெளிவாகிறது. மக்களின் வாழ்க்கை துன்பங்கள், எதிர்பார்ப்புகள், குடும்ப நலம், பொருளாதாரத் தேவைகள், வேளாண்மை, சமூக உறவுகள், பண்பாட்டு மரபுகள் ஆகிய அனைத்துடனும் அது தொடர்புடையதாக உள்ளன. இத்திருவிழாக்கள் தென் மாவட்டத்தின் ஓர் பண்பாட்டு தொடர்ச்சியாக ஆண்டுதோறும் நிகழ்கிறது இதில் மக்கள் சமய நல்லிணக்கத்துடனும் கலந்து கொண்டு புனிதரின் அருளையும் ஆசிரியையும் பெற்று செல்கின்றனர்.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. மோனிகா – புனிததோமா நமது தோமா, பக்.22
2. பரிசுத்தவேதாகமம் – இந்திய வேதாகம இலக்கியம், பக்.32
3. ஜான் கென்னடி.சமி. – பெரிய அந்தோணியாரின் வாழ்க்கை வரலாறு,பக்.23
4. அம்பை.மணிவண்ணன் – கோயில் ஆய்வும் நெறிமுறைகளும், பக்.187
5. சற்குணவதி - தமிழக நாட்டுப்புறவியில், பக்.108
6. பக்தவத்சலபாரதி – தமிழர் மானுடவியல், பக்.368
7. மேலது, பக்.369
8. சிவசுப்பிரமணியன்.ஆ – தமிழ்க்கிறித்தவம், பக்.86
9. தகவலாளர் சவரியம்மாள் வயது 76 ஊர் மாரம்பாடி

## துணைநூற் பட்டியல் (References)


1. மோனிகா - புனித தோமா நமது தோமா,
2. வைகறை பதிப்பகம்,
3. திண்டுக்கல்.
4. பரிசுத்த வேதாகமம் - இந்திய வேதாகம் இலக்கியம்,
5. பராக்காசாலை,
6. சென்னை.
7. சமி.ஜான்கென்னடி - பெரிய அந்தோணியார் வாழ்க்கை வரலாறு,
8. ஆரஞ்ச பிரிண்ட் சொல்யுசன்ஸ்,
9. சிவகாசி.
10. அம்பைமணிவண்ணன் - கோயில் ஆய்வும் நெறிமுறைகளும்,
11. ஜெ.ஜெ.பப்ளிகேஷன்ஸ்,
12. மதுரை.
13. முனைவர்.திருமதி.சற்குணவதி - தமிழக நாட்டுப்புறவியல்,
14. மணிவாசகர் பதிப்பகம்,
15. சென்னை.
16. பக்தவத்சலபாரதி - தமிழர் மானுடவியல்,
17. அடையாளம் பதிப்பகம்,
18. திருச்சி.
19. ஆ.சிவசுப்பிரமணியன் - தமிழகக்கிறித்தவம்,
20. காலச்சுவடு பப்ளிகேஷசன்,
21. நாகர்கோவில்.

© 2026 பாஸ்கர் வேளாங்கண்ணி ஜே, முனைவர்.கலைச்செல்வன் ச. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..